செ.வெ.எண்.66

நாள்.23.10.2017.

## தமிழ்நாடு அரசு - மீன்வளத்துறை

## மீனவ சமுதாயத்தை சார்ந்த பட்டதாரி இளைஞர்கள் இந்திய குடிமைப் பணியில் சேருவதற்கான போட்டி தேர்வில் சிறப்பிக்க ஆயத்த பயிற்சி அளித்தல்

மாண்புமிகு அமைச்சர் (மீன்வளம் நிதி, பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தம்) அவர்கள் 11.07.2017 அன்று சட்டப்பேரவையில் அறிவித்ததில் மீன்வளத்துறை மற்றும் சென்னை அண்ணாமேலாண்மை பயிற்சி நிலையம் (இந்திய குடிமைப் பணிகளுக்கான பயிற்சி நிலையம்) இணைந்து ஆண்டுதோறும் மீனவ கூட்டுறவு சங்க கடல் மற்றும் உள்நாட்டு மீனவ சமுதாயத்தை சார்ந்த படித்த 20 பட்டதாரி இளைஞர்களை தேர்ந்தெடுத்து தனிக்குழுவாக அமைத்து, அவர்களுக்கு இந்திய குடிமைப்பணிக்கான போட்டி தேர்வில் கலந்து கொள்ள ஏதுவாக, பிரத்யோக பயிற்சி அளித்திடும் ஒரு புதிய திட்டத்தினை செயல்படுத்திட அரசு ஆணை வழங்கியுள்ளது.

கடல் மற்றும் உள்நாட்டு மீனவ கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் மற்றும் மீனவர் நலவாரிய உறுப்பினர் குழந்தைகள் இப்பயிற்சியில் திட்டத்தில் சேர்ந்து பயன் பெறலாம்.

இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெற விரும்புவோர் விண்ணப்பபடிவம் மற்றும் அரசு வழிகாட்டுதல்களை மீன்வளத்துறையின் இணையதளமான www.fisheries.tn.gov.in லிருந்து கட்டணமின்றி பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் அல்லது விண்ணப்ப படிவங்களை மண்டல மீன்துறை இணை இயக்குநர்கள் மற்றும் மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகங்களில் அலுவலக வேலை நாட்களில் நேரில் விலையின்றி பெற்று கொள்ளலாம்.

விண்ணப்பதாரர்கள் மீன்துறை இணையதளத்தில் உள்ள விரிவான அரசு வழிகாட்டு நெறிமுறைகளின்படி பூர்த்தி செய்து உரிய ஆவணங்களுடன் சம்பந்தப்பட்ட மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு பதவிஞ்சல் மூலமாகவோ அல்லது நேரிடையாகவோ 28.10.2017 பிற்பகல் 5.00 மணிக்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

மேலும் இத்திட்டம் குறித்த விவரங்களுக்கு சம்பந்தப்பட்ட மீன்துறை உதவி இயக்குநர்கள் / இணை இயக்குநர் அலுவலகங்களை நேரில் தொடர்பு கொள்ளலாம் என திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்கள்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.